# உலகத் தர கல்வி வழங்க அமெரிக்க சியாட்டில் பல்கலைக்கழகத்துடன் லயோலா கல்லூரி கூட்டு ஒப்பந்தம்

சென்னை, டிச. 10 –

உலகத் தர கல்வி வழங்க, அமெரிக்க வாஷிங்டன் மாநில சியாட்டில் பல்கலைக்கழகத்துடன் லயோலா கல்லூரி கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் மூலம் கலாச்சாரம், கல்வி, விஞ்ஞான ஆராய்ச்சி போன்ற பல்வேறு கூட்டு நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும் என்று லயோலா கல்லூரி அமைப்புக்களின் தலைவர் மறைதிரு பிரான்சிஸ் பி சேவியர் தெரிவித்தார்.




வாஷிங்டன் மாநில சியாட்டில் பல்கலைக்கழக தலைவர் எடுரோ டு பெனல்வர் தலைமையில் இதன் உயர் அதிகாரிகள், நிர்வாகிகள் விழாவில் கலந்து கொண்டனர்.

லயோலா கல்லூரி நிர்வாகங்கள் லிபா, லிசட் மற்றும் எல்சிஇ கல்வி நிறுவனங்களின் தலைவர் பிரான்சிஸ் பி சேவியர் பேசுகையில், லயோலா குரூப் கல்வி நிறுவனங்கள் கல்வியை உலக தரத்துக்கு மேம்படுத்த தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. பல்வேறு ஆராய்ச்சி பிரிவுகளை துவக்குகின்றன. வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் அவர்கள் திறமையை அறிந்து அதை மாணவர்களுக்கு வழங்க லயோலா ஏற்பாடு செய்கிறது என்றார்.

இந்த கூட்டு ஒப்பந்தம் மூலம் தொடர்ந்து கல்வி மேம்படுத்துதல் மற்றும் மாணவர் பரிமாற்ற ஏற்பாடுகளும் செய்யப்படும் என்றார்.

லயோலா கல்லூரியில் இது பற்றி நடத்தப்பட்ட கருத்தரங்கில், மேல்நிலைக் கல்வியில் உலகத்தர மயமாக்குதல் இதற்கு கூட்டு ஏற்படுத்துதல் இணைப்பு வசதிகள் உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருவது பற்றி விவாதிக்கப்பட்டது.

இந்த கருத்தரங்கில் சியாட்டில் பல்கலைக்கழக பேராசிரியர் ஜோசப் பிலிப்ஸ், அந்தோணி வரோனா, அமித் சுக்லா மது டி. ராவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

லயோலா கல்லூரியின் பழைய மாணவரும் ஓ. பி. ஜிந்தால் குளோபல் பல்கலைக்கழக நிறுவனரும் துணைவேந்தருமான சி. ராஜ்குமார் விழாவில் கலந்து கொண்டார்.

லயோலா கல்லூரியின் முதல்வர் மறைதிரு ஏ. தாமஸ், லிபா டைரக்டர் மறைதிரு ஜோ. அருண் ஆகியோர் ஒருங்கிணைத்து இந்த கூட்டு ஒப்பந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

# லயோலா கல்லூரி, விநாயகா மிஷன்ஸ் கல்வி நிறுவனங்களுடன் சியாட்டில் பல்கலைக்கழகம் ஒப்பந்தம் கையெழுத்து

சென்னை, டிச.10–

புதிய கல்வி சார் கூட்டாண்மை செயல்பாட்டை மேற்கொள்வதற்காக இந்தியாவைச் சேர்ந்த ஓ.பி. ஜிண்டால் குளோபல் பல்கலைக்கழகமும், யுஎஸ்ஏ – ன் சியாட்டில் பல்கலைக்கழகமும் ஒருங்கிணைந்திருக்கின்றன. உயர் கல்வித் துறையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் புதிய மற்றும் புத்தாக்க வாய்ப்புகளை உருவாக்குவதற்கு இந்த கூட்டாண்மை ஒத்துழைப்பு நடவடிக்கை உதவும்.

சியாட்டில் பல்கலைக்கழகத்திலிருந்து சென்னைக்கு வருகை தந்திருக்கும் அதன் உயர் நிர்வாக மற்றும் தலைமைத்துவ குழுவினர், தமிழகத்தில் இரு முதன்மையான கல்வி நிறுவனங்களாகப் புகழ் பெற்றிருக்கும் லயோலா கல்லூரி மற்றும் விநாயகா மிஷன்ஸ் ரிசர்ச் ஃபவுண்டேஷன் ஆகிய கல்வி நிறுவனங்களுடன் இத்தகைய கூட்டு வகிப்பு செயல்பாட்டிற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டிருக்கிறது.

சியாட்டில் பல்கலைக்கழகத்தின் பிரசிடெண்ட் எடுவர்டோ எம். பெனால்வர், டீன் ஆண்டனி ஈ. வரோனா (ஸ்கூல்ஆஃப்லா), டீன் அமித்சுக்லா ஜோசப் எம். பிலிப்ஸ் மற்றும் அசோசியேட் டீன் மது டி. ராவ் ஆகியோரை உள்ளடக்கிய சியாட்டில் பல்கலைக்கழக உயரதிகாரிகள் குழு தற்போது இந்தியாவிற்கு வருகைதந்திருக்கிறது.




ஓ.பி.ஜிண்டால் பல்கலைக்கழக துணை வேந்தர் சி.ராஜ்குமார், சியாட்டில் பல்கலைக்கழக பிரசிடெண்ட் எடுவர்டோ எம்.பெனல்வர்

ஓபிஜிண்டால் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் சி. ராஜ்குமார் இது தொடர்பாக கூறியதாவது: "உயர்கல்வியை ஊக்குவிப்பதிலும் மற்றும் உயர்கல்வி உலகிற்கு தலைமைத்துவத்தை வழங்குவதிலும் தமிழ்நாடு மாநிலம் முன்னணியில் இருந்து வந்திருக்கிறது. இந்தியாவிற்கான தேசிய அளவிலான கல்வி சேர்க்கை விகிதமானது, 27% என்ற அளவில் இருக்கிறது. உயர்கல்வியைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் நிகர சேர்க்கை விகிதம் 52%க்கும் அதிகமாகும். உயர்கல்வியைப் பொறுத்தவரை உண்மையில் தமிழ்நாடு மாநிலமே இந்நாட்டில் முதன்மை வகிக்கும். இரண்டாவதாக மருத்துவப் படிப்புகள், பொறியியல் மற்றும் அறிவியல், தொழில்நுட்பக் கல்வி ஆகியவற்றில் மட்டுமின்றி, மானுடவியல் மற்றும் சமூக அறிவியல் கல்வித் துறைகளிலும் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. இவ்வாறாக இந்நாட்டில் கல்வித் துறையில் முன்னிலை தமிழ்நாடு மாநிலம் முன்னிலை வகிப்பதால் இந்தியாவிலுள்ள முன்னணி பல்கலைக்கழகங்களுடன் கூட்டாண்மைகளை உருவாக்க சியாட்டில் பல்கலை திட்டமிட்ட போது தமிழ்நாடு மாநிலத்தையும் மற்றும் சென்னை மாநகரையும் தாங்கள் வருகை தரும் அமைவிடங்களாக அவர்கள் தேர்வு செய்தது பொருத்தமானதே. தேசிய கல்விக் கொள்கையே இந்த கூட்டாண்மை நடவடிக்கைக்கான மூன்றாவது காரணமாக இருக்கிறது என்றார்.